1979 நவம்பர் 10'

(பிற்பகல் 3–00]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர்வர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. பெரியசாமி அவர்கள் 41-வது விதியின் கீழ் கொடுத்திருந்த தீர்மானத்தைப் படித்தார்கள். ஆனால் அவர் எழுதிக் கொடுத்ததை செக்ஷனில் திருத்தி எழுதியிருக்கிறார்கள். அவர் எழுதிக் கொடுத்தற்கு, அதற்கான குற்றச்சாட்டுக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதையும் சேர்த்து பதிவு செய்து கொள்வதற்காக படித்துவிட அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிவிப்பு சுருக்கமாக இருக்க வேண்டும். அதோடு இனவெஸ்டிகேஷனுக்கு இடைஞ்சலாக இருக்கும். அதனால் நான்தான் திருத்தச் செய்தேன். ஆனால் முழுப் பொருளும் இதிலே அடங்கிவிட்டது. நான் நீக்கிய பகுதிகளை நீங்கள் படிக்கக் கூடாது.

(இ) திரு இராஜாராம் ரெட்டி அவர்களுக்கு ஒதுக்கப்பெற்றுள்ள இடம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி அவர்களுக்கு இருக்கை எண். 90 ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) அரசினர் தீர்மானம்.

பேரவை நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்தி வைக்கப்பெறுவது குறித்து.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே

"பேரவை விதி 16 (1)-ன்படி பேரவை இன்றிலிருந்து (10—11—1979) மீண்டும் கூடும். நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறவேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்றுஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது.

[1979 நவம்பர் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. நன்றி. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 3-02 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

(7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

**62. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பணிகளை பராமரிக்கும் அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/1979) திரும்பப் பெறுவதற்கான 8—11—1979 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியான ஆளுநர் அவர்களின் 7—11—1979-ஆம் தேதியிட்ட ஆணை.

**63. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 12/1979) திரும்பப் பெறுவதற்கான 8—11—1979 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியான ஆளுநர் அவர்களின் 7—11—1979 ஆம் தேதியிட்ட ஆணை.

64. 28—8—1969-ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றிய தீர்மானத்திற் கிணங்க கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்களது சொத்திருப்புப் பற்றிய விவரக் கணக்குகள் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

1. திரு. ஏ. ஆர். தாமோதரன், (31—3—1978-ஆம் தேதியன்று உள்ளவாறு).

2. திரு. ஜி. சுவாமிநாதன், (31—6—1978-ஆம் தேதியன்று உள்ளவாறு).

** 9-11-1979-ஆம் தேதியன்று பேரவை முன் வைக்கப்பெற்றது.